**மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

First Published : 22 Jun 2010 11:49:06 AM IST

பெரம்பலூர், ஜூன் 21: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜூன் 29 ஆம் தேதி நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தலைமையில் ஜூன் 29 ஆம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில், வேளாண்மை தொடர்பான நீர்ப் பாசனம், வேளாண்மைக்கான கடன் உதவித் தொகைகள், இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

எனவே, இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 80.69 அடி**

First Published : 22 Jun 2010 12:12:46 PM IST

தஞ்சாவூர், ஜூன் 21: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 80.69 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,261 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,030 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 22 Jun 2010 10:32:10 AM IST

ராஜபாளையம், ஜூன் 21: ராஜபாளையம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த திடீர் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்த இரு வாரங்களாக விருதுநகர் மாவட்டத்தில், விருதுநகர், சிவகாசி உள்பட பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வந்தது. ஆனால், அதிக பரப்பளவில் விவசாயம் நடைபெற்றுவரும் ராஜபாளையம் மற்றும் சிவகிரி பகுதிகளில் மழை பெய்யவில்லை. இந்நிலையில், வெயிலும் வாட்டி வந்தது.

இதனால், இப்பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட நெல் மற்றும் கரும்பு பயிர்களுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் வாடியதால், விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் திடீரென இப்பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால், வாடிய பயிர்கள் பசுமையுடன் காணப்பட்டன.

இதுபோல தொடர்ந்து சில நாள்கள் மழை பெய்தால், பயிர்களைக் காப்பாற்றிவிடலாம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

தினமலர்

**மழையால் மலருக்கு வந்த வினை பூக்களின் விலை திடீர் சரிவு**

சேலம்: மழைகாலம் துவங்கியதால் பூக்களின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால், வியாபாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர். மணம் வீசும் மதுரை குண்டு மல்லி, மொட்டு மலராத முல்லையின் வாசத்திற்கும், மணமில்லாத கனகாம்பரத்தின் சுண்டு இழுக்கும் நிறத்திற்கும் மயங்காத ஆண்களே இல்லை. அவ்வப்போது தலைகாட்டிய மழையினால், மலர்களின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி கனகாம்பரம் ஒரு கிலோ 160 ரூபாயை எட்டியது. மற்ற வண்ண மலர்களான சம்பங்கி ஒரு கிலோ 30 ரூபாய், அரளி ஒரு கிலோ 40 ரூபாய், ரோஸ் ஒரு கிலோ 60 முதல் 80 ரூபாய், குண்டு மல்லி ஒரு கிலோ 100 ரூபாய், முல்லைப்பூ ஒரு கிலோ 60 ரூபாய் வரை எப்போதும் போல கட்டுக்குள் இருக்கின்றன. இது குறித்து, புஷ்ப கமிஷன் ஏஜெண்டுகள் சங்க பொருளாளர் ராமு கூறியதாவது:
திருவண்ணாமலை, தருமபுரி, பெங்களூர், ஒசூர், நாமக்கல், ஆகிய ஊர்களில் இருந்தும், பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, தலைவாசல், மேச்சேரி உட்பட சேலம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் அனைத்து வகையான பூக்களும் விளைவிக்கப்பட்டு, சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. நாங்கள் தினமும் காலையிலேயே ஒவ்வொரு பூக்களும் விலை நிர்ணயம் செய்துவிடுவோம். ஆனால், பூக்களின் வரத்தை பொறுத்து, விலைகளை நிர்ணயிக்கப்படுகிறது. இதில் பூக்களின் விலை ஏறுமுகமாகவோ இறங்குமுகமோ இருக்கும்.தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை துவங்கி ஆங்காங்கே கண மழை பெய்து வருகிறது. மழைக்காலத்தில் மலர்களின் விளைச்சல் அமோகமாக இருக்கும். ஆனால், கடந்த ஆண்டை விட, நடப்பு ஆண்டு மழை குறைந்துள்ளது. மேலும், தற்போது திருமண சீஸன் இல்லாததால், பூக்களின் விலை குறைந்துள்ளது. தவிர, கனகாம்பரம் பூக்கள் தேவை அதிகரிப்பதால் விலை அதிகரித்துள்ளது. எனவே, நேற்று கனகாம்பரத்தின் விலை கிலோ 160 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தவிர, வரும் ஆணி மாதங்களில் முகூர்த்த நாட்கள் அதிகமாக இருப்பதால் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும், முகூர்த்த நாட்கள், பண்டிகை நாட்கள் வரவிருப்பதால், சில நாட்களுக்கு பிறகு அனைத்து பூக்களின் விலை உயர்ந்துவிடும், என்றார்.

**காலாவதி விதைகளை விற்றால் நடவடிக்கை**

தர்மபுரி: "காலாவதி விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, தர்மபுரி விதை ஆய்வு துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: விவசாயத்துக்கு முக்கிய தேவையாக விளங்குவது தரமான விதைகளே. நல்ல மகசூல் பெற்று விவசாயிகள் வாழ்க்கை

தரத்தை உயர்த்துவதற்கு முக்கியமானவர்களாக விதைகளை விற்பனை செய்வோர் உள்ளனர். விதைச் சான்றுத்துறையில் முறையாக விதை விற்பனை உரிமம் பெற்றவர்கள் மட்டுமே விதைகளை விற்பனை செய்ய வேண்டும். விதை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு முறையாக விலைப்பட்டியல் வைக்கப்பட வேண்டும். விற்பனைப் பட்டியலில் பயிர், ரகம், குறியீடு எண், முளைப்புத்திறன், காலாவதி நாள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். தரமற்ற, காலாவதியான விதைகளை விற்பனை செய்தால், சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**நாவல் பழங்கள் விற்பனை விறுவிறுப்பு**

நாமக்கல்: நாமக்கல் நகரில் நாவல் பழம் சீஸன் துவங்கியதை அடுத்து, விற்பனை சூடு பிடித்துள்ளது. ஆண்டு தோறும் மே மாதம் இறுதியில் நாவல் பழம் சீஸன் துவங்கி இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும். கர்நாடகா மாநிலம் பெங்களூரு, மைசூரு மற்றும் ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்படும் நாவல் பழங்கள், நாமக்கல் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் இத்தகைய நாவல் பழம் கொல்லிமலையில் விளைகிறது. இங்கு விளையும் பழம் சிறியதாகவும், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் விளையும் பழம் பெரியதாகவும் இருக்கிறது. மருத்துவ குணம் கொண்டதாக கருதப்படுவதால், நுகர்வோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இது குறித்து நாமக்கல் நகரில் நாவல் பழம் விற்பனை செய்யும் வியாபாரி சேகர் கூறியதாவது:
ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் நாவல் பழம் சீஸன் துவங்கும். கொல்லிமலையில் இந்த மாதம் துவங்குகிறது. தற்போது ஆந்திரா, கர்நாடகா மாநிலத்தில் விளையும் நாவல் பழங்களை வாங்கி வந்து விற்பனை செய்கிறோம். ஒரு கிலோ நாவல் பழம் 120 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதில் மருத்துவ குணம் இருப்பதால், மக்கள் அதிகளவில் வாங்கி சுவைக்கின்றனர். குறைந்த லாபமே வைத்து விற்பனை செய்வதால், விரைவில் விற்பனையாகி விடுகிறது. நாள் ஒன்றுக்கு 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**நாவல் பழம் சீஸன் துவக்கம்**

நாமக்கல்: நாமக்கல் நகரில் நாவல் பழம் சீஸன் துவங்கியதை அடுத்து, விற்பனை சூடு பிடித்துள்ளது. ஆண்டு தோறும் மே மாதம் இறுதியில் நாவல் பழம் சீஸன் துவங்கி இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும். கர்நாடகா மாநிலம் பெங்களூரு, மைசூரு மற்றும் ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்படும் நாவல் பழங்கள், நாமக்கல் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் இத்தகைய நாவல் பழம் கொல்லிமலையில் விளைகிறது. இங்கு விளையும் பழம் சிறியதாகவும், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் விளையும் பழம் பெரியதாகவும் இருக்கிறது. மருத்துவ குணம் கொண்டதாக கருதப்படுவதால், நுகர்வோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இது குறித்து நாமக்கல் நகரில் நாவல் பழம் விற்பனை செய்யும் வியாபாரி சேகர் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் நாவல் பழம் சீஸன் துவங்கும். கொல்லிமலையில் இந்த மாதம் துவங்குகிறது. தற்போது ஆந்திரா, கர்நாடகா மாநிலத்தில் விளையும் நாவல் பழங்களை வாங்கி வந்து விற்பனை செய்கிறோம். ஒரு கிலோ நாவல் பழம் 120 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை விற்பனை

செய்யப்படுகிறது. இதில் மருத்துவ குணம் இருப்பதால், மக்கள் அதிகளவில் வாங்கி சுவைக்கின்றனர். குறைந்த லாபமே வைத்து விற்பனை செய்வதால், விரைவில் விற்பனையாகி விடுகிறது. நாள் ஒன்றுக்கு 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது, என்றார்.

**சான்று விதை உற்பத்தி பயிற்சி**

ராமநாதபுரம்: முதுகுளத்தூர் வட்டார விதைப்பண்ணை விவசாயிகள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கான சான்றுவிதை உற் பத்தி மற்றும் விதைச் சான்று பயிற்சி நடந்தது. முதுகுளத்தூர் வட்டார வேளாண் அலுவலர் ஞானவீரன் வரவேற்றார். மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் கனகராசன் பயிற்சியை துவக்கி வைத்தார். பரமக்குடி விதைச்சான்று அலுவலர் முருகேசன் பேசினார். பங்கேற்ற விவசாயிகளுக்கு சான்று விதை உற்பத்தி மற்றும் விரிவான பயிற்சி விளக்கம் அளிக்கப் பட்டது. வாத்தியனேந்தல் கிராம விதைப் பண்ணை விவசாயி சாத்தையா நன்றி கூறினார்.

**செம்மை நெல் சாகுபடி திட்டம் விவசாயிகளிடையே அதிருப்தி**

தேனி: தேனி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தை மாவட்டத்தின் எல்லா பகுதியிலும் உள்ள விவசாயிகள் பயன்படும் வகையில் செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் விளைச்சல் அதிகரிப்பதால் தேனி மாவட்டத்தில் உள்ள எல்லா விவசாயிகளும் இத்திட்டத்தின் படி நடவு செய்ய முன்வந்துள்ளனர்.

செம்மை நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய் யும் விவசாயிகளுக்கு உரங் கள், உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்து உரங் கள், களை அமிழ்த்தும் கருவி, மார்க்கர் (நடவு செய்யும் கருவி) விவசாயத்துறை சார்பில் இலவசமாக வழங்கப்படுகிறது.ஆனால் விவசாயத்துறையினர் மாவட்டத்தில் திட்டத்தை பிரபலப்படுத்த வேண்டும் என்பதற்காக தேசிய நெடுஞ் சாலை, நெடுஞ்சாலை ஓரங்களில் வயல்களை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டும் செம்மை நெல் சாகுபடி சலுகைகளை வழங்குகின்றனர்.தேவாரம், போடி, கடமலைக்குண்டு, ஜெயமங்கலம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்ட பலன்கள் கிடைப்பதில்லை. இம்முறை நடவுப்பணிகள் தொடங்க உள்ளதால் செம்மை நெல் சாகுபடி திட்டத்தை மாவட்டம் முழுவதும் உள்ள எல்லா விவசாயிகளும் பயன்படும் வகையில் பரவலாக தேர்வு செய்து செயல்படுத்த வேண்டும்.

**கொத்தமல்லி அன்று ரூ.100; இன்று ரூ.20**

மதுரை: பருவமழையால், உற்பத்தி பாதித்து, ஓசூர் பகுதியிலிருந்து வரத்து குறைந்ததால்,மதுரையில் சில வாரங்களாக கிலோ 100 ரூபாய் முதல் 150 ரூபாய் விற்கப்பட்ட கொத்தமல்லி, நேற்று கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது.சென்ட்ரல் மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :தற்போது ஓசூர் பகுதியில் இருந்து மட்டுமில்லாமல், தேனி மாவட்டத்திலிருந்தும் வரத்து அதிகரித்துள்ளதால் கொத்தமல்லி விலை குறைந்துள்ளது.மற்ற காய்கறி விலையில் பெரிய மாற்றமில்லை. நேற்று ஒரு கிலோ தக்காளி 30 ரூபாய், உருட்டு தக்காளி 20, கத்தரிக்காய் 10, வெள்ளை கத்தரிக்காய் 7, சுரக்காய் 6, வெண்டைக்காய் 10,

புடலங்காய் 10, பீட்ரூட் 10, கேரட் 25, காலிபிளவர் 7-10, முட்டைகோஸ் 10, உருளைகிழங்கு 12-18, சேனை கிழங்கு 25, கருணை கிழங்கு 30, பீர்க்கங்காய் 20, இஞ்சி 70, பீன்ஸ் 25, பட்டர் பீன்ஸ் 40, சோயா பீன்ஸ் 35, பட்டாணி 70, பாகற்காய் 20, பெரியது 25, வெங்காயம் 12, சிறியது 20, அவரைக்காய் 30, புதினா 7, கறிவேப்பிலை 12, கீரை வகைகள் 10, கொத்தவரை 7, நூக்கல் 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார். சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**உளுந்து, துவரம் பருப்பு விலை குறைவு**

மதுரை: பருவமழை காரணமாக, "உற்பத்தி அதிகரிக்கும்' என்ற நம்பிக்கையில், மதுரையில் உளுந்தம், துவரம் பருப்பு விலையை வியாபாரிகள் குறைத்துள்ளனர்.
பருப்பு வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன் கூறியதாவது :கடந்த வாரம் 5900 ரூபாய்க்கு விற்ற நூறு கிலோ உளுந்தம் பயறு, நேற்று 5700க்கும், பருப்பு 7800லிருந்து 7750க்கும் விற்கப்பட்டது. துவரம் பயறு 4500லிருந்து 4400க்கும், பருப்பு 6500லிருந்து 6300க்கும் விற்கப்பட்டது.பாசி பயறு (அவியல்) 6750லிருந்து 6650க்கும், பருப்புக்குரியபயறு 6350லிருந்து 6200க்கும், பருப்பு 8600லிருந்து 8500க்கும் விற்கப் பட்டது.கடலை பயறு 2300லிருந்து 2250க்கும், பருப்பு 2700லிருந்து 2600க்கும் விற்கப்பட்டது.பட்டாணி பயறு 1500லிருந்து 1550க்கும், பருப்பு 1700லிருந்து 1750க்கும் விற்கப்பட்டது, என்றார்.

**தேங்காய் எண்ணெய் விலை உயர்வு**

மதுரை: கொப்பரை தேங்காய் உற்பத்தி குறைவால், தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.மதுரையில் கடந்த வாரம் 970 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் தேங்காய் எண்ணெய், நேற்று 990 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற எண்ணெய் விலை குறித்து, எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது :கடந்த வாரம் 650 ரூபாய்க்கு விற்கப்பட்ட பாமாயில், நேற்று ஐந்து ரூபாய் குறைந்து 645 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நல்லெண்ணெய் 1180 ரூபாயிலிருந்து 1170 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தும்பை நல்லெண்ணெய் 1600 ரூபாய், கடலை எண்ணெய் 1160, சூரியகாந்தி எண்ணெய் 800, ரைஸ்பிரான் ஆயில் 655, வனஸ்பதி 730 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**பதனீர் உற்பத்தி குறைவால் கருப்பட்டி விலை வீழ்ச்சி: விவசாயிகள் பாதிப்பு**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி., பகுதியில் குறைவான பதனீர் உற்பத்தியிலும் கருப்பட்டி விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், திருவண்ணாமலை பகுதிகளில் அதிகளவில் பனை மரங்கள் உள்ளன. இங்கிருந்து நாள் தோறும் 50 ஆயிரம் லிட்டருக்கும் அதிகமான பதனீர் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து பதனீரை பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்து வருகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் பதனீர் விருதுநகர், கோவில் பட்டி போன்ற ஊர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சில விவசாயிகள் பதனீரை காய்ச்சி கருப்பட்டி உற்பத்தி செய்து தனியாருக்கும், கருப்பட்டி உற்பத்தியாளர்

கூட்டுறவு சங்கங்களுக்கும் விற்பனை செய்து வருகின்றனர். கடந்த ஓராண்டாக சரி வர மழை பெய்யாததால் பதனீர் உற்பத்தி தாமதமாகவே துவங்கியது. இதனால் பனை விவசாயிகள் எதிர்பார்த்ததை விட குறைவான பதனீரே உற்பத்தியானது. தற்போது மழை பெய்யாததால் பதனீரை தேடி வரும் தேனீக்களும் அதிகளவில் பதனீரை குடித்தும் வந்தன. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். பதனீர் சீசன் துவக்க நேரத்தில் ஒரு கிலோ கருப்பட்டி 70 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது பதனீர் உற்பத்தி குறைந்த நிலையிலும் ஒரு கிலோ கருப்பட்டி 60 ரூபாய்க்கு கொள்முதல் செய்து வருவதால் பனை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து விவசாயி அய்யனார் கூறியதாவது: "தற்போது பதனீர் உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. ஆனால் கருப்பட்டி விலையில் எதிர்பார்த்தை விட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது'. என அவர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு மானிய உதவித்தொகை முதல்வர் வழங்கினார்**

ஜூன் 23,2010,00:00  IST

புதுச்சேரி : புதுச்சேரியில் நெல் பயிரிடும் விவசாயிகளுக் கான சாகுபடிக்கு பிந் தைய மானியத்தின் காசோலையை முதல்வர் வைத்திலிங்கம் வழங்கி னார்.புதுச்சேரியில் நெல் பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு சாகு படிக்கு பிந்தைய மானிய மாக ஒரு எக்டேருக்கு 4,000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என சட்டசபை கூட்டத் தொடரில் முதல்வர் வைத்திலிங்கம் அறிவித் திருந்தார்.அதன் அடிப்படை யில் 2009ம் ஆண்டு சொர்ணாவாரி பட்டத்தில் நெல் சாகுபடி செய்திருந்த விவசாயிகள் மொத்தம் (பொது மற்றும் ஆதிதிரா விடர்) 5135 பேருக்கு 1.41 கோடி ரூபாய் மானி யமாக வழங்கப்பட்டது. இத்தொகை, வங்கிகள் மூலம் விவசாயிகள் வங்கிக் கணக்கில் செலுத் தப்பட உள்ளது. இதற் கான காசோலையை முதல்வர் வைத்திலிங்கம் நேற்று தனது அலுவல கத்தில் இந்தியன் வங்கி மேலாளர் உமாகாந்திடம் வழங்கினார். வேளாண்துறை உதவி இயக்குனர் ரவிப்பிரகாசம் உடனி ருந்தார்.

**பொரி வண்டுகளை (கிரிப்டோலோமஸ்) உற்பத்தி செய்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2010,00:00 IST



சாறு உறிஞ்சும் பூச்சிகள் பயிர்களின் இளம்பருவம் முதல் அறுவடை வரை சேதத்தினை ஏற்படுத்துகின்றன. இவற்றால் மாவுப்பூச்சி மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது. இப்பூச்சியினைச் சுற்றி வெளிப்புறத்தில் வெண்மைநிற பஞ்சு போன்ற அமைப்பு காணப்படும். இப்பூச்சியினை போர்வை போன்று சுற்றி இருந்து பாதுகாக்கிறது. இதனால் இப்பூச்சியினை எவ்வளவு ரசாயன மருந்து அடித்தாலும் மல்பெரி, பப்பாளி போன்றவற்றில் இதன் தாக்குதல் அதிகம் காணப் படுகிறது. குறிப்பாக மல்பெரி இலைகள் பட்டுப்புழுக்களுக்கு உணவாக இடப்படுவதால் அதிக அளவு தொடர்ந்து மழையின்றி நீண்ட நாட்களுக்கு நிலவுவதால் இப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக உள்ளது. இச்சூழ்நிலையில் இயற்கையில் இப்பூச்சியினை பொரிவண்டுகள் உண்ணும். இதன் அடிப்படையில் தற்போது பொரி வண்டுகளின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த அதனை வளர்த்து வயலில் விடும் தொழில்நுட்பம் உருவானது. இத்தொழில் நுட்பத்தினை பரவலாக ஆராய்ச்சி நிறுவனங்கள் மட்டுமே அவற்றின் ஆய்வகங்களில் வைத்து குறுகிய அளவில் உற்பத்தி செய்து வருகிறது. அதனால் விவசாயிகள் இதன் பயனை முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. விவசாயிகள் இந்த தொழில்நுட்பத்தினைப் பின்பற்ற இவ்வித உயிர்ப்பூச்சிக் கொல்லிகள் அவர்களுக்கு எளிதாகவும், தரமாகவும் குறைந்த விலையில் தேவையான நேரத்தில் கிடைக்க வேண்டும்.

**பொரிவண்டு உற்பத்தி செய்ய தேவையான பொருட்கள் / வசதிகள்**

---

1. 20 து 10 அடி பரப்பளவு அறை (2) இரும்பு வளையம் (3) பூசணிக்காய் (4) பவிஸ்டின் மருந்து (5) சுண்ணாம்பு பவுடர் (6) அடுப்பு (7) சல்லடை (8) பிரஷ் (9) தேன் (10) மெழுகு (11) மேடை. டப்பாக்கள் (மூடி காற்றுப்போகும் வண்ணம் சிறு துளைகளுடன் இருக்க வேண்டும்). இவற்றுடன் தினமும் இரண்டு நபர்கள் வேலைசெய்ய தேவைப்படும்.

பொரி வண்டுகளை உற்பத்தி செய்யும் முறை: அரை அடி விட்டமுள்ள டப்பாவினை எடுத்து அதில் 2 கிராம் மாவுப்பூச்சியினை பிரஷ்சால் தொட்டுவிட வேண்டும். இதில் 10 நாட்கள் வயதான 10 ஜோடி கிரிப்டோலோமஸ் பொரிவண்டு அல்லது 20 ஜோடி ஸ்கிம்னஸ் என்ற பொரிவண்டினை விட்டு மூடிவைக்க வேண்டும். இந்த பொரிவண்டுகள் மாவுப்பூச்சியினை உண்டு முட்டைகளை தனித்தனியாகவோ அல்லது 4 முதல் 12 முட்டைகள் சேர்ந்த குவியலாகவோ இடும். அடுத்த ஒரு வாரம் முதல் 10 நாட்களில் சின்ன புழுக்கள் வெளிவந்து மாவுப்பூச்சியினை உண்ண ஆரம்பிக்கும். 10வது நாளில் முட்டை இடுவதற்கு விட்ட பொரிவண்டுகளை தனியாக பிரித்து வேறு டப்பாவில் விட வேண்டும். இந்த இளம்புழுக்களுக்கு 1 முதல் 2 கிராம் மாவுப்பூச்சியினை தினமும் தொடர்ந்து 5 நாட்களுக்கு கொடுக்க வேண்டும் (15 நாட்கள்). பின்வரும் 10 நாட்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் 3 கிராம் மாவுப்பூச்சியினை தீனியாக விட வேண்டும் (25 நாட்கள் வரை). 25வது நாளில் புழுக்கள் கூட்டுப் புழுவாக மாறத் துவங்கும். இந்த நிலையிலும் தொடர்ந்து மாவுப்பூச்சியினை உணவாகக் கொடுக்க வேண்டும். இப்போது ஒரு நாள் விட்டு ஒரு நாளைக்கு 1 கிராம் மாவுப்பூச்சி போதுமானது.


கூட்டுப்புழு பருவம் அடுத்த ஒரு வாரத்திற்கு நீடிக்கும் (32-35 நாட்கள் வரை). பின் 32 முதல் 35 நாளில் வளர்ந்த பொரிவண்டுகள் கூட்டுப்புழுவில் இருந்து வெளிவரும். இதுவரை 20 வண்டுகளுக்கு 35 கிராம் மாவுப்பூச்சி இரை தேவைப்படும். இந்த பொரிவண்டுகளை ஒரு டப்பாவில் 15 வண்டு வீதம் போட்டு தேனினை உணவாக வழங்க வேண்டும். இவ்வாறு தேன் கொடுத்து அடுத்த 10-15 நாட்கள் இவற்றை வளர்க்க வேண்டும். இச்சமயத்தில் ஆண் மற்றும் பெண் பூச்சிகள் இணைந்து பெண்பூச்சி முட்டையிடும்

பருவத்தினை அடையும். இந்த 10 முதல் 15 நாட்களுக்கு தேனினை உணவாக விழுங்கும்போது ஒரு பங்கு தேனுடன் இரண்டு பங்குநீர் சேர்த்து பஞ்சில் நனைத்து அதனை பிழிந்து டப்பாவின் பகுதியில் நட்டுவிட வேண்டும். இந்த பஞ்சினை 3 நாட்களுக்கு ஒருமுறை மாற்ற வேண்டும். அல்லது புளிப்பாகி பூச்சிகள் அதனை சாப்பிடாது.

**தொடர்புக்கு: செல்வமுகிலன், கன்னிவாடி, திண்டுக்கல். 94861 65088. -கே.சத்தியபிரபா, 94865 85997**

**வாத்து வளர்ப்பு:**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2010,00:00 IST



நெல் அறுவடை முடிந்த வயல் வெளிகளில் வாத்துக்களை மேய விடலாம். வாத்துக்களுக்கு பெரிய அளவில் நோய் தாக்குதல் இருக்காது. ஒரு வாத்து சராசரியாக ஒரு வருடத்திற்கு 150 முட்டைகள் வரை இடும். 1000 வாத்துக்கள் வளர்க்கும்போது ஒரு வருடத்தில் 1,25,000 முட்டைகள் கிடைக்கும். நிகர லாபமாக லட்சம் ரூபாய் வரை கிடைக்கிறது என்கிறார் அனுபவ விவசாயி நடராஜன். அவர் 2000 வாத்துகள் வளர்த்து வருகிறார். ""காலை 7 மணிக்கு வயல்ல இறங்கி பொழுது சாயற வரைக்கும் அவற்றை மேய்த்து சாயங்காலம் ஓட்டிட்டு வந்து கொட்டிலில் அடைக்க வேண்டியதுதான். இதற்கு 2 ஆட்கள் போதும். நாம் இருக்கிற இடத்தைத் தேடி வந்து முட்டைகளையும் வாத்துக்களையும் வியாபாரிகள் வாங்கிக்கிறாங்க. ஆந்திராவில்தான் வாத்துக்குஞ்சுகள் அதிகமாக கிடைக்கிறது. பொதுவா 6 மாதக்குஞ்சுகளை வாங்குவதுதான் நல்லது. போக்குவரத்துச் செலவு உட்பட ஒரு குஞ்சுக்கு 65 ரூபாய் வரை ஆகும். மேய்ச்சலுக்கு போற இடத்திலே கம்பி வலையால் பட்டி போடவேண்டும். வெயில் நேரத்துல தண்ணி நிறைய இருக்கிறமாதிரி இடத்திலே போய் விடணும். ஆடி, சித்திரை மாதங்களில் மேய்ச்சலுக்கு வயல் கிடைக்காது. அந்த மாதிரி சமயத்தில் பட்டிக்குள்ள வெச்சுத்தான் தீவனம் கொடுக்க வேண்டியதிருக்கும். விலை கம்மியா கிடைக்கும். ஏதாவது தானியங்களைத் தீவனமாகக் கொடுக்கலாம். வாத்துக்கள் நாலரை மாதத்திலிருந்து 6 மாதத்திற்குள் பருவத்திற்கு வந்து முட்டையிட ஆரம்பிக்கும். வாத்து முட்டைகளுக்கு

கேரளாவில் நல்ல மார்க்கெட் உண்டு". மேலும் ***விபரங்களுக்கு: நடராஜன், 99439 90433, ஜெயக்குமார், 94435 48994, நடேசன், 98420 93941, துரை, 97513 30897.***

**விரால் மீன் வளர்ப்பு:**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2010,00:00 IST

உயிருடன் உள்ள இம்மீன்கள் நீர்பாசி மற்றும் தாவரங்கள் நிறைந்த உள்நாட்டு நீர்நிலைகளான ஏரி, குளம், குட்டைகளில் காணப்படும். தற்போது விரால் மீன் குஞ்சுகள் வளர்ப்பு குளங்களில் இருப்புசெய்து வளர்த்தெடுத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விரால் மீன் குஞ்சுகள் ஆற்றோரங்களில் குளம், குட்டைகளின் ஓரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. 1000 குஞ்சுகள் ரூ.1500 விலை போகிறது. தவிர செயற்கையான தூண்டுதல் முறையில் ஊசி மூலம் பிட்யூட்டரி அல்லது ஓவாபிரியம் செலுத்தி இனச்சேர்க்கை ஏற்படுத்தி மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்யலாம். இதற்காக ஆராய்ச்சிகள் மத்திய நன்னீர் மீன்வள ஆராய்ச்சி மையத்தில் விரால் இனப்பெருக்கம் மற்றும் வளர்ப்பு குறித்த ஆய்வு நடத்தப்பட்டது. இதுகுறித்து ஆய்வுப்பணிகள் துவங்கிட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. (மீன்வளத் துறை, தமிழ்நாடு அரசு) நன்கு வளர்ந்த மீன் குஞ்சுகளைப் பெரிய வளர்ப்புக் குளங்களில் எக்டருக்கு 5000 வீதம் இருப்புச் செய்யலாம். அதற்கு முன் குளங்களில் உள்ள பழைய நீரை அப்புறப்படுத்தி உழுது காயவைத்து, பின்னர் சுண்ணாம்பு எக்டருக்கு 200 கிலோ வீதம் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். பின்னர் ஓரளவு தண்ணீர் விட்டு மாட்டுச்சாணம் எக்டருக்கு 2000 கிலோ கரைத்து குளத்துக்குள் தெளிக்க வேண்டும். பின்னர் ஒரு மீட்டர் உயரத் திற்கு குறையாமல் நீர் ஏற்ற வேண்டும். மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வதற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன் ஏற்பாடு களைச் செய்துகொண்டால் குளத்து நீரில் நுண்ணுயிர்கள் வளர்ந்து மீன் குஞ்சுகளுக்கு ஏற்ற இயற்கை உணவாக இருக்கும். மேலும் கூடுதலாக உணவு தேவைப் படுவ தால் திலேபியா, கம்பூசியா, ஓரிசியாஸ், அப்போகிலஸ் போன்ற அதிக இனப் பெருக்கம் ஏற்படுத்தும் வகை யிலான சிறு மீன்களை எக்டருக்கு 1000 வரை விட வேண்டும். குளத்தில் பூச்சிகள் விழும் வகையில் ஒளி விளக்குகள் அமைத்தால் இரவு நேரங்களில் அதிகமான அளவில் பூச்சிகள் விழ ஏதுவாகும். மேலும் செயற்கையாக உணவு கொடுத்து அதை எடுத்து வளரப் பழக்க வேண்டும்.

10 மாதங்களுக்குப் பின்னர் ஒரு மீன் 600 கிராமுக்கு மேல் வளர்ச்சியடைந்தால் விற்பனைக்கு ஏதுவாக அறுவடை செய் யத் துவங்கலாம். விரால் மீனைப் பொறுத்த மட்டில் இறந்த மீன்களைக் காட்டிலும் உயிருள்ள மீன் விலை மதிப்புள்ளது. ஒரு எக்டருக்கு ரூ.1,44,000 வரை வருவாய் கிடைக்கும். (தகவல்: இன்றைய வேளாண்மை, ஜூன் 2010) -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நவீன தொழில்நுட்பம் - செலவில்லாத தீவன சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2010,00:00 IST

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஆதிநாராயணன் பசுந்தீவனத்துக்காக தனித் தோட்டத்தையே பராமரித்து வருகிறார். பட்டுக்கோட்டை செல்லும் சாலையில் உள்ள பாப்பாநாடு அருகிலுள்ள

ஆலத்தன்குடிகாடு கிராமத்தில்தான் இருக்கிறது அந்த தீவனத்தோட்டம். மல்பெரி, வேலிமசால், சவுண்டல் (சூபாபுல்) போன்ற பலவித தீவனப் பயிர்களை வளர்த்து வருகிறார். 230 சென்டில் மல்பெரி, ஊடுபயிராக வேலி மசால், முயல்மசால், கலப்பக்கோணியம் சாகுபடி செய்துள்ளார் விவசாயி. 5 அடி இடைவெளியில் 3 அடி அகலம், அரை அடி ஆழம் கொண்ட வாய்க்கால்களை அமைக்க வேண்டும். வாய்க்கால் தோண்டும்போது கிடைக்கும் மண்ணை இரு வாய்க்கால்களுக்கு இடையில் போட்டு மேட்டுப்பாத்தி அமைத்த, வாய்க்கால்களின் வெளிப்புற இரு ஓரங்களிலும் கரணைக்குக் கரணை 3 அடி இடைவெளிவிட்டு மல்பெரி விதைக் கரணைகளை நடவேண்டும். கரணையில் 2 பருக்கள் மண்ணுக்குள் புதையுமாறு இருக்க வேண்டும். 230 சென்ட் நிலத்திற்கு 13 ஆயிரம் விதைக்கரணைகள் தேவைப்படும்.
மேட்டுப்பாத்திகளின் மையத்தில் அரை அங்குல ஆழத்திற்கு நீளமான கோடு இழுத்து ஒரு பாத்தியில் முயல் மசால், அடுத்த பாத்தியில் கலப்பக்கோணியம், அடுத்த பாத்தியில் வேலிமசால் என மாற்றி மாற்றி விதைக்க வேண்டும். ஒவ்வொரு விதையும் தலா 2 கிலோ தேவைப்படும். விதைப்பதற்கு முன் ஒவ்வொரு வகை விதைகளுடன் 6 கிலோ மணல் கலந்து சிறிது நேரம் வைத்திருந்து பின் விதைத்து, உயிர்த்தண்ணீர் விட வேண்டும். 3 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின் நிலத்தின் ஈரத்தைப் பொறுத்து தண்ணீர் பாய்ச்சினால் போதும். 200 லிட்டர் நீரில் 10 கிலோ சாணம், 10 லிட்டர் மாட்டுச்சிறுநீர், அரை கிலோ மாட்டுக்கொட்டகைக் கோமிய சகதி ஆகியவற்றைக் கலந்து ஒரு நாள் வைத்திருந்து பாசனநீர் கலந்து விடவேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை இதைச் செய்ய வேண்டும். 90 நாட்களில் அனைத்துமே அறுவடைக்குத் தயாராகிவிடும். முயல்மசால், வேலிமசால் ஆகியவற்றை அறுவடை செய்யும்போது தரையில் இருந்து ஒரு அடி உயரம் விட்டு அறுக்க வேண்டும். இவற்றை 40 நாள் இடைவெளி விட்டு மீண்டும் அறுக்கலாம். மல்பெரி மூலம் ஒரு ஏக்கரில் ஒரு ஆண்டில் சுமார் 30 முதல் 35 டன் தீவனம் கிடைக்கும். 100 அடி நீளம் கொண்ட பாத்தியில் ஒரு வருடத்தில் வேலிமசால் 400 கிலோவும் முயல்மசால் 300 கிலோவும் கலப்பக் கோணியம் 400 கிலோவும் கிடைக்கும். உயிர்வேலியாக சவுண்டல்: வேலி ஓரங்களில் 5 அடி இடைவெளியில் ஒரு சவுண்டல் விதையைப் போட்டு 3வது நாள் தண்ணீர் பாய்ச்சினால்போதும். அதன் பிறகு தண்ணீர், சாணம் எதுவுமே தேவை யில்லை. தானாகவே வளர்ந்துவிடும். 3 மாதத்திலிருந்து அறுவடை செய்யலாம். ஒரு மாதத்திலிருந்து ஆண்டுக்கு 15 கிலோ தீவனம் கிடைக்கும். பட்டுப்புழுவுக்கு மட்டுமல்ல கால்நடைகளுக்கும் மல்பெரி: பட்டுப்புழு வளர்ப்பதற்கு மட்டும்தான் மல்பெரி என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அது நல்ல கால்நடைத் தீவனமாகிறது என்ற விபரம் நிறைய விவசாயிகளுக்கு தெரியவில்லை என்கிறார் விவசாயி. இது மாதிரியான பசுந்தீவனத்தை கால்நடைகள் விரும்பி உண்ணும். சீக்கிரம் செரிமானம் ஆகிறது. கால்நடைகளுக்கு வெறும் அடர்தீவனத்தையும் புல்லையும் மட்டம் கொடுத்தால் கண்டிப்பாக ஆராக்கியமாக இருக்காது. விவசாயிகளுக்கு இலவச பயிற்சியும் கொடுத்து, விதைகளையும், விதைக் கரணைகளையும் இலவசமாக கொடுத்து வருகிறேன்.
தொடர்புக்கு: ஆதிநாராயணன், 98656 13616. (தகவல்: பசுமை விகடன், ஜனவரி 2010)

## காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி குறுவை சாகுபடிக்கு தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிடவில்லை ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஜூன்.23–

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி குறுவை சாகுபடிக்கு தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிடவில்லை என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

குறுவை சாகுபடி

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக குறுவை சாகுபடி செய்ய முடியாத அவல நிலைக்கு தமிழக விவசாயிகள் ஆளாக்கப்பட்டு இருப்பதாகவும்; சாதாரணமாக லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நடக்கும் குறுவை சாகுபடி, இந்த ஆண்டு வெறும் 53 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு இருப்பதாகவும்; சென்ற ஆண்டு 56 ஆயிரத்து 500 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டதாகவும்; குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகளில் வெறும் 14 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு இருப்பதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த அளவுக்கு குறுவை சாகுபடி குறைந்ததற்கு காரணம் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விடாததும், அதை தி.மு.க. அரசு தட்டிக்கேட்காததும் தான் என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை.

தண்ணீர் திறக்கவில்லை

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பின்படி, கர்நாடகா தமிழ்நாட்டிற்கு ஆண்டிற்கு 192 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிட வேண்டும்; அதிலும் குறிப்பாக, குறுவை சாகுபடி செய்ய ஏதுவாக, ஜூன் மாதத்தில் 10 டி.எம்.சி. தண்ணீரையும், ஜூலை மாதத்தில் 34 டி.எம்.சி. தண்ணீரையும் திறந்துவிட வேண்டும். இதை கர்நாடகா செய்யவில்லை.

இறுதி தீர்ப்பின்படி தண்ணீரை திறந்துவிடுமாறு தமிழக அரசின் சார்பில் கர்நாடக அரசை வலியுறுத்தவில்லை. இதேபோன்று தொடர்ந்து தமிழக அரசு செயல்பட்டால், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற கோரிக்கை தமிழக அரசின் சார்பில் பல ஆண்டுகளாக விடுக்கப்படவில்லை என்ற வாதத்தை கர்நாடக அரசு முன்வைக்க வழி வகுத்துவிடும் என்பதோடு, நமக்கு கிடைக்கக்கூடிய உரிமைகள் அனைத்தும் பறிபோய்விடும் சூழ்நிலையும் உருவாகிவிடும்.

தமிழகத்தில் குறுவை சாகுபடி குறைந்ததற்கு மற்றுமொரு காரணம் கடுமையான மின்வெட்டு. குறைந்தபட்சம் 14 மணி நேர மின்சாரம் தங்கு தடையின்றி வழங்கப்பட்டால், குறுவை சாகுபடி அதிகரிக்க வாய்ப்பு உண்டு என்றும் விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது.

விவசாய கடன் தள்ளுபடி

நெல்லை மாவட்டம் ஆலங்குடி, ஆலடிப்பட்டி, அத்தியத்து உள்ளிட்ட கிராமங்களில் கூட்டுறவு வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கியில் கடன் பெற்றுள்ள ஆயிரக்கணக்கான

விவசாயிகளை உடனடியாக கடன் தொகையை திரும்ப செலுத்துமாறு வங்கிகளின் அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்துள்ளதாகவும்; கடன் தள்ளுபடிக்கான தமிழக அரசின் சான்றிதழை காண்பித்தால், அதுபற்றி எல்லாம் தங்களுக்கு தெரியாது என்று வங்கி அதிகாரிகள் தெரிவிப்பதாகவும்; கடன் தொகையை செலுத்த தவறினால் வீடுகள், டிராக்டர்கள் ஆகியவை ஜப்தி செய்யப்படும் என்று மிரட்டியுள்ளதாகவும் தகவல்கள் வந்துள்ளன. “திடீரென்று கேட்டால் நாங்கள் எங்கே போவது? தற்கொலை செய்து கொள்வதை தவிர வேறு வழியில்லை” என விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். இவ்வாறு ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.